பண்டைய சமூகம்

அலகுப்பரீட்சை – 04

தரம்-10 **வரலாறு** **நா.பிரகாஸ் B.A,SLTS**

பகுதி i

1. கி.பி 9ம் நூற்றாண்டை சேர்ந்த புத்தென்னேகெல கல்வெட்டில் சட்டத்துறை அழைக்கப்பட்ட விதம்
   1) எக்தென் சமிய
   2) வத்ஹிமியன் வதால
   3) சபாவ
   4) மஹாலேகம்

2. புராதன காலத்தில் நீதிமன்றம் அழைக்கப்பட்ட விதம்.
   1) தசகம் எத்தன
   2) எல்லங்காவ
   3) ஏக ஆஸ்தான சாம்ய
   4) சபாவ

3. 2ம் சேனன் காலத்தில் மஹலே கஸ்பா என அழைக்கப்பட்டவர் பின்வருவோரில் யார்.
   1) அரசன்
   2) சேனாதிபதி
   3) பொருளாளர்
   4) பதிவாளர் நாயகம்

4. பிரதேச மட்டத்தில் செயற்பட்ட சபை அல்லது பத்து கிராமத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் கொண்ட சபை அழைக்கப்பட்ட விதம்.
   1) தசகம் எத்தன
   2) பரிகித்தகம
   3) சபாவ
   4) வத்ஹிமியன் வதால

5. தேவநம்பிய தீசனுக்கு பின் ஆட்சியுரிமை பெற்ற சகோதரர் அல்லாதவர்.
   1) மூடசிவன்
   2) உத்திய
   3) அசேலன்
   4) சூரதிஸ்ஸ

6. இலங்கையுடன் புராதன காலத்திருந்து வெளிநாட்டு தொடர்புகளை கொண்டிராத நாடாக அமைவது.
   1) இந்தியா
   2) சீயம்
   3) உரோம்
   4) சீனா

7. கி.பி 9ம்நூற்றாண்டில் அராபிய வரலாற்று ஆசிரியர் அல்பலசூரியின் குறிப்புக்களில் இலங்கை எவ்வாறு அழைக்கப்பட்டது
   1) தம்பபன்னி
   2) சிகப்புதீவு
   3) செரண்டிப்
   4) தப்ரபேன்

www.lkedu.lk

8. பின்வரும் நிரல்1 இல் வைத்திய சேவைகளை ஆற்றிய மன்னர்களும் நிரல்2 அவர்கள் சேவைகளும் தரப்பட்டுள்ளது. அவற்றை ஒழுங்குபடுத்தும் போது சரியாக அமையும் விடை சோடி

நிரல்1	நிரல் 2
1. 5ம் மகிந்தன்	A- சொத்திசால எனும் பிரசவ விடுதி அமைத்தல்.
2. 4ம் காசியப்பன்	B- நாட்டிலுள்ள சகல வைத்தியசாலைகளுக்கும் சகல வசதிகளை ஏற்படுத்தல்.
3. 1ம் உபதிஸ்ஸன்	C- கடுமையான காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்கு உபசக்கரோகநாச எனும் வைத்தியசாலை அமைத்தல்.
4. பண்டுகாபயன்	D- பஸவந்தி நாமசால எனும் பிரசவ விடுதி அமைத்தல்.

1) 1)BCAD 2) ADCB 3) BCDA 4) CBAD

9. பத்தினி தெய்வ கோயில் திறப்பு விழாவுக்கு சேர நாடு சென்ற மன்னன்.
1) கனிட்டதிஸ்ஸன் 3) 1ம் கஜபாகு
2) 6ம் அக்போ 4) 1ம் விஜயபாகு

10. சேனையை விலங்குகளிடமிருந்து பாதுகாக்க கம்புகளினால் அமைக்கப்பட்ட வேலி அழைக்கப்பட்ட விதம்
1) தண்டுவெட்ட 3) ஹெலிகடா
2) பெல 4) கினியாதிகாவ

11. நெற்பயிற்செய்கையில் மூன்று போகங்கள் தொடர்பாக கீர்த்தி ஸ்ரீ மேவனின் எக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது
1) பதுளை தூண் கல்வெட்டு 3) வெஸ்ஸகிரிய கல்வெட்டு
2) மிகிந்தலை கல்வெட்டு 4) தோணிக்கல கல்வெட்டு

12. 4ம் காசியப்பனின் காலத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் பாலை பெற வளர்க்கப்பட்ட பசுக்கள் அழைக்கப்பட்ட பதம்.
1) கிரிகெரி 3) கெடு கனக
2) கெதி அட 4) கனத்த

13. அம்பாந்தோட்டையில் உள்ள மண்டகல கல்வெட்டில் பொற்கொள்ளர் அழைக்கப்பட்ட விதம்.
1) துலாதர 3) கும்பகர
2) மணிகர 4) தம்பகர

14. வேகரிய கல்வெட்டில் தடிக என அழைக்கப்பட்டவர் எக் கைத்தொழிலில் ஈடுபட்டவர். அழைக்கப்பட்டனர்.
1) மட்பாண்டம் வனைதல் 3) நூல் நூற்பவர்
2) தந்த செதுக்கல் 4) இரத்தின கைத்தொழில்

www.lkedu.lk

15. இலங்கையில் புராதன காலத்தில் காணப்பட்ட வரத்தக நகரங்களில் ஒன்றாக அமைவது
1) பொலநறுவை
2) கண்டி
3) மகாகம
4) கொழும்பு

16. ஹோப்பிட்டிகம கல்வெட்டில் சந்தை நிர்வாகம் தொடர்பான சட்டங்களை பொறிபித்த மன்னன்
1) 1ம் விஜயபாகு
2) வசபன்
3) 3ம் உதயன்
4) 4ம் உதயன்

17. ஹேமமால இளவரசியும் தந்த இளவரசனும் புனித தந்ததாதுவை எத்துறைமுகமூடாக இலங்கைக்கு எடுத்து வந்தனர்.
1) கோகன்ன
2) ஜம்புகோளப்பட்டினம்
3) லங்காபட்டினம்
4) மகாதித்த

18. அனுராதபுர காலத்தில் சமய மத்திய நிலையாகவும் கல்வி மத்திய நிலையாகவும் காணப்பட்டது.
1) ஆலாஹன பிரிவெனா
2) மகாவிகாரை
3) சுனேத்திராதேவி பிரிவெனா
4) அபயகிரி பிரிவெனா

19. இராசரட்டை காலத்தில் எழுதப்பட்ட சிங்கள இலக்கியங்களில் ஒன்றாக அமைவது
1) தப்பிய அட்டுவா
2) அனுருத்த
3) தீபவம்சம்
4) ஜானகி ஹரணய

20. அனுராதபுர காலத்தில் வெளிநாட்டு வர்த்தகர்கள் வாழ்ந்தமையை போவத்தேகல கல்வெட்டில் காம்போஜ மஹா புகிய என குறிப்பிடப்பட்டுள்ளது. காம்போஜகம் என அழைக்கப்பட்ட நாடு.
1) பாரசீகம்
2) ஆப்கானிஸ்தான்
3) இந்தியா
4) காம்போடியா

பகுதி - ii

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01) i. பின்வரும் வரலாற்றிடங்களை இலங்கைப்படத்தில் குறிக்குக.
அனுராதபுரம் , நாகதீப , பொலனறுவை , சிகிரியா , மகாகம , பதுளை , கோகன்ன , ஜம்புகோளப்பட்டினம் , லங்காபட்டினம் , மாதோட்டம் , கொடவாய

ii. A,B ஆகிய படங்கள் தொடர்பான வினாக்களுக்கு விடை தருக.

A.



1. அருகில் காட்டப்படுவது யாது.
2. இவ் அமைப்பு எக்காலத்தில் அமைக்கப்பட்டது.
3. இதனை நிர்மாணித்தவர்கள்.
4. இது எந்த சமயத்தவரது வழிபாட்டிடம்.

B.



1. படத்தில் காட்டப்படும் நிர்மானிப்பு.
2. இந்நிர்மானிப்பை அமைத்த மன்னன்.
3. இவ் ஓவியம் எதன் குறியீடாக அமைகிறது.
4. இது எத்தனையாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது.

02) i. பின்வரும் A,B,C ஆகியன அழைக்கப்பட்ட விதம்

A- வத்ஹிமியன் வதால

B- ஏக ஆஸ்தான சாம்ய

C- தசகம் எத்தன

ii. பின்வரும் A,B,C,D தொடர்பான வினாக்களுக்கு அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள விடைகளை தெரிவு செய்க

A- ருவன்வெலிசாய தாதுகோபம் அலங்கரிக்க உரோமுக்கு தூதுகுழு அனுப்பல்.
B- கலிங்க இளவரசி திரிலோக சுந்தரியை திருமணம் செய்தல்.
C- சீனாவுடன் வியாபாரத் தொடர்பு வைத்த மன்னன்.
D- 18 வைத்தியசாலைகளை அமைத்த மன்னன்.

iii. புராதன காலத்தில் சமயம் காணப்பட்டமையை இரண்டு உதாரணங்களுடன் விளக்குக.

iv. பண்டைய காலத்தில் பொருளாதாரம் நிலவிய முறையை மூன்று விடயங்கள் ஊடாக விளக்குக.

02) i. இலங்கை புராதன காலத்தில் வெளிநாட்டு தொடர்புகளை மேற்கொண்ட நாடுகள் மூன்று தருக.

ii. ஹோப்பிட்டிகம தூண் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள சந்தை நிர்வாகம் தொடர்பான சட்டங்கள் நான்கை குறிப்பிடுக.

iii. புராதன காலத்தில் கல்வி முறை நிலவியமை இரண்டு காரணங்களுடன் விளக்குக.

iv. பண்டைய காலத்தில் இனங்களுக்கிடையே இணக்கப்பாடு காணப்பட்டது என்பதனை மூன்று விடயங்கள் ஊடாக விளக்குக.

www.lkedu.lk